


**07.07.2025**

## 27. சபையில் இயேசு நிறைவேற்றும் “சலிப்பு வேலை” கவனம்!

ஒரு உண்மை கேளுங்கள்: தேவன் தரும் பரீட்சையில், கிறிஸ்தவ விசுவாசிகளில் 90 சதவீதம் கொண்டோர், பிசாசினால் உண்டான பாவத்திலும், மாம்ச இச்சையிலும் வீழ்ச்சியடைந்தார்கள் என்ற உண்மையை அறிந்து கொள்வது உங்கள் உள்ளத்திற்கு அதிகமான தெய்வ பயத்தை கொண்டு வர வேண்டாமா?

புடைத்து, சலித்து எடுக்கும் பணியை இன்றும் ஆண்டவர், நாள்தோறும் செய்து வருகிறார் என்ற விழிப்புணர்வை நாம் யாவரும் அடைவது நலம்! தன் ஆவிக்குரிய ஜீவியத்தில் பூரணமடைய வேண்டும் என்ற விருப்பத்தையும், இயேசுவைப் போல் மாற வேண்டும் என்று தீராத வாஞ்சையும், சத்தியத்தில் நிலை நிற்க உறுதிகொண்டவர்கள் உங்கள் சபையில் இருக்கிறார்களோ? அப்படியானால், இந்த கேள்வி, மாபெரும் பரீட்சைக்குரிய கேள்வியாக அவ்வித சபைகளின் மேல் ஜொலித்து நின்று, தேவனுடைய ‘சலிப்பு வேலையை’ தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டேயிருக்கும்!

– ரத்னம்